| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : 17/07/2021 | முதல் | 21/07/2021 |
| | அறிக்கை எண் : | 057/ 2021 | வெளியீட்டு நாள் : | 16/07/2021 | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36° செல்சியஸ் ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 25°- 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (13.07.2021 முதல் 15.07.2021) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-07- 2021 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13/07 | 14/07 | 15/07 | தேதி | நாள்-1 17/07 | நாள்-2 18/07 | நாள்-3 19/07 | நாள்-4 20/07 | நாள்-5 21/07 |
| 0.0 | 0.0 | 1.0 | மழை (மி.மீ) | 4 | 5 | 15 | 5 | 0 |
| 36 | 36 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35 | 35 | 35 | 36 | 36 |
| 26 | 25 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| 5 | 5 | 7 | மேக மூட்டம் (ஆக்டர்) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 62 | 60 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 85 | 85 |
| 54 | 52 | 57 | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 7 | 15 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 15 | 15 |
| மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 17, 18, 20 தேதி லேசான மழையும் மற்றும் 19 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35° - 36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 15 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**கனமழை எச்சரிக்கை:**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 18 ம் தேதி இடியுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்பு.

மாவட்டத்தின் ஒருசில பகுதிகளில் ஜூலை 16,17,19 மற்றும் 20 ம் தேதிகளில் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

16.07.2021 மற்றும் 18.07.2021 - தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது.

**விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு**

ஜூலை 16 முதல் 22 தேதி வரையிலான காலகட்டத்தில் தமிழகத்தில் இயல்பை விட கூடுதலான மழையே பெய்ய வாய்ப்பு உள்ளது.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

### முக்கிய பயிர்கள் : வெங்காயம் & கால்நடை

தற்போது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் வெங்காயப் பயிரில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலால் வெங்காயத்தின் இலை முழுவதும் வெண்திட்டுக்கள் காணப்படும்இகடுமையாக தாக்கப்பட்ட இலைகள், நுணியில் இருந்து காயத் தொடங்கும். இதனை வயலைச் சுத்தமாகவும், சீரான இடைவெளியில் களை எடுப்பதன் மூலம் இலைப் பேனைக் கட்டுப்படுத்தலாம் இந்த வகையான பூச்சித்தாக்கப்பட்ட வயல்களை வெள்ளைப்பாசண முறையில் நீர்பானம் செய்தும் இலைப்பேன்களின் நடமாட்டத்தை குறைக்கலாம். ஒரு ஏக்கருக்கு 300மில்லி புகையிலைக் கசாயம் மற்றும் 350மில்லி மீன் எண்ணெய் ரெசின் சோப் என்ற அளவில் தண்ணீரில் கலந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

தற்போது நிலவும் பருவச்சூழலில் மாடுகளில் சப்பை நோய்; தாக்குதலுக்கான வாய்ப்புகள் உள்ளது. இந்நோய் காற்றின் ஈரப்பதம் கூடுதலாக உள்ள பகுதிகளிலுள்ள மாடுகளைப் பெரும்பாலும் பாதிக்கிறது. இதுவும் ஓர் மழைக்கால நோயாகும். நல்ல ஆரோக்கியமான திடமான இளம் மாடுகளை 6 மாத வயது முதல் 3 ஆண்டு வயது வரை அதிகம் பாதிக்கிறது. தொடை அல்லது முன்கால் சப்பையிலோ அல்லது கழுத்து போன்ற சதைப்பிடிப்புள்ள பகுதிகளிலோ வெப்பம் மிகுதியாகவும் வலியோடு கூடியதும், கடினமான தன்மையுள்ள பெருத்த வீக்கம் காணப்படும் தோலின் நிறம் கருப்பாக இருக்கும். இதன் காரணமாக மாடுகள் நடக்க முடியாமல் நொண்டும். நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் மாட்டைப்பிரித்துத் தனியாக ஒதுக்குப்புறமாக வைத்துக் கண்காணிக்க வேண்டும். நோய்க் கண்ட 48 மணி நேரத்தில் உடனடியாக மருத்துவம் செய்யாமல் போனால், மாடுகள் இறந்து விடும.; கால்நடை மருத்துவரின் உதவியுடன் உடனடியாக மருத்துவம் செய்யவேண்டும். மழைக்காலத்திற்கு சுமார் 1 மாத்திற்கு முன்பே ஒவ்வொரு ஆண்டும் மாடுகளுக்குத் தடுப்பூசி போடவேண்டும்